K

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2018

## பதினொன்றாம் வகுப்பு

## பொருளியல்

நேரம்: 1.15 மணி

பதிவு எண் [ ]

மதிப்பெண்கள்: 45

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **5×1=5**

1) ''மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகள் பற்றி பொருளியல் ஆராய்கிறது'' என்று கூறியவர்

அ) ஆடம்ஸ்மித்
ஆ) இலயனல் ராபின்ஸ்
இ) ஆல்ஃபிரடு மார்ஷல்
ஈ) சாமுவேல்சன்

2) இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாகும் போது மொத்தப் பயன்பாடு ................

அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக

3) சமநோக்கு வளைகோட்டை முதன் முதலில் தோற்றுவித்தவர்

அ) ஹிக்ஸ் ஆ) ஆலன் இ) கீன்ஸ் ஈ) எட்ஃஜ்வொர்த்

4) சராசரி உற்பத்தி (AP)யைக் கணக்கிடப் பயன்படும் விதம்

அ) ATP/N ஆ) ATP/AN இ) TP/NP ஈ) TP/N

5) எந்த காரணி சமுதாய மாற்றம் காணும் (உருவாக்கும்) முகவர் என்று அழைக்கப்படுகிறது?

அ) உழைப்பாளர்
ஆ) நிலம்
இ) தொழில் அமைப்போன்
ஈ) மூலதனம்

### பகுதி - II

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி: **5×2=10**

வினா எண் 11 கட்டாயம் விடையளி.

6) பொருளியல் என்றால் என்ன?

7) பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளை கூறுக.

8) விருப்பங்களை வகைப்படுத்துக.

9) சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?

10) 'உழைப்பு' - வரையறு.

11) உற்பத்திச் சார்பினைக் குறிப்பிடுக.

### பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி: **5×3=15**

வினா எண் 17 கட்டாயம் விடையளிக்கவும்.

12) பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.

13) நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளாதாரத்தை வேறுபடுத்துக.

14) நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்கு.

15) சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?

16) நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?

17) அளிப்பு நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

## பகுதி - IV

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3×5=15**

18) பொருளியலின் பல்வேறு பிரிவுகளை விளக்குக.

19) தேவை விதியை வரைபடத்துடன் விவரி.

20) விலைத் தேவை நெகிழ்ச்சியின் வரைபடங்களை (மட்டும்) கூறுக.

21) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.

---------